www.padippakam.com

# சிந்தத்தழ்-செய்தி

ஆய்வு இதழ்,




பிப்ரவரி 1998 இதழ் எண் 26

படிப்பகம்

www.padippakam.com

சிற்றிதழ்ச் செய்தி அனைத்து இதழாளர்களுக்கும் அனுப்பப்படுகிறது. சி.செ. இதழிலுள்ள குறைகளைச் சுட்டுமாறும், இவைகளைத் தவிர வேறு எப்படி வெளியிட்டால் பயன்மிகும் என ஆலோசனை எழுதுமாறும் அன்புடன் வேண்டுகிறேன்.

- பொள்ளாச்சி நசன் -

படிப்பகம்

www.padippakam.com

## 1997 இல் தொடங்கித் தொடர்ந்த இதழ்களில் பரிசும் பாராட்டும் பெறும் இதழ்கள்.

1) தென் செய்தி. தென்னாசியச் செய்திச் சேவை மையத்தின் திங்களிருமுறை செய்தி மடல். வெ: 23 பழ.நெடுமாறன், 17/1 நரசிம்மபுரம், மயிலை, 600 004.

2) தேனாறு. கவிதைத் திங்களிதழ். வெ: 12 ஆடற்கோ, 31.குட்டிசெட்டித்தெரு, சென்னை 7

3) (நம்ம ஊரு) யாதும் ஊரே. பம்மல் நாகல்கேணித் தமிழ்ச் சங்க வெளியிடு. மாத இதழ். வெ: 12 நா.வை.சொக்கலிங்கம், 15 ஆனந்தன் தெரு, பம்மல்.

4) (பெரியார் முரசு) புரட்சிப் பெரியார் முழக்கம். பெரியார் திராவிடர் கழக மாத இதழ். வெ: 10. விடுதலை க.ராசேந்திரன், 29.ஆதழியலாளர் குடியிருப்பு திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை 4

5) எழுச்சி தலித் முரசு. அடக்கப்பட்ட மக்களின் சமூக நீதித் திங்களிதழ். வெ: 10. பெ,சந்திரசேகரன், 6, 97, தெரு, 15 ஆவது செக்டார், கே.கே.நகர், சென்னை 78.

(ஒவ்வொரு இதழுக்கும் ரூ. 100 பரிசனுப்பப் படுகிறது)

### பாராட்டுப் பெறும் இதழ்கள்

1) இசைத் தமிழ். மாத இதழ். வெ: 6. புரட்சிதாசன் 17. வடக்குபோக் சாலை, தி.நகர், சென்னை 17.

2) மாற்றுட விடியல். மாத இதழ். வெ: 8 தீசுமாசு,டி. செல்வா, 18/2 காமராசர் நகர், சூளைமேடு, 600 094

3) தாரகை. மாத இதழ். வெ: 8 தமிழ்ச் செல்வன், 2-14/3இ/9 முத்துராமலிங்கம் தெரு, காந்திநகர் 624 202

(வெ: - வெளியான இதழ்களின் எண்ணிக்கை)

*சிற்றிதழ்ச்செய்தி ஆய்விதழ்*

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

படிப்பகம்

www.padippakam.com



1989 முதல் ஒவ்வொரு ஆண்டும் தொடங்கி வெளியான இதழ்களில், சிறந்த இதழ்களுக்குச் சி.செ., பரிசளித்து வருகி -றது. பரிசு அறிவிப்பு சி.செ., இதழிலும், பரிசுத்தொகை பணவிடை மூலமும் அனுப்பப்படுகிறது. இச் செயல்வழி இப் பத்தாண்டுகளில் வெளியான சிற்றிதழ்களை மிகச் சரியாக விவரிக்க முடியும்(விவரிக்க விரும்புகிறது). இவ்வாறான சிறு இதழ்களின் தொடக்கமும், அச்சுப்பதிவும் தமிழிலக்கியத்தின் வரலாறு காட்டுபவைகளே.

1989 இல் தொடங்கிய 52 இதழ்களில் எந்த இதழுமே இன்று இல்லை. சி.செ., யின் பரிசு பெற்ற 'பூங்காற்று' (ஈக் காட்டுத் தாங்கல், சென்னை) இதழும்கூட இன்று இல்லை. இதுதான் நிலை. இதழாசிரியர், ஏகப்பட்ட எதிர்பார்ப்புக ளோடு தொடங்கிச் செயற்பட்டு, நிறுத்திக் கொண்ட போதி லும்/விலகிய போதிலும் அவர்களது செயற்பாட்டைத் தமிழ் இலக்கியப் பதிவாக்க வேண்டியது அவசியமல்லவா? சி.செ., இந்த நோக்கொடுதான் தொடர்ந்து வருகிறது.

★ சிறந்த இதழுக்கான பரிசு பெறத் தகுதிகள் யாவை?

இதழுக்கான இலக்கைத் தேர்ந்தெடுத்து, அதை விளக்கு வதற்கான வடிவத்தையும் முறைப்படுத்திக் கொள்ள வேண் -டும். இதழாளரின் வளர்ச்சி இதழில் தெரியும். இதழும்/இத ழாளரும் வளர வேண்டும். இதழின் படைப்புகள் செறிவாக, நுட்பமாக இருக்க வேண்டும். இலக்கினுடைய கடந்தகால, நிகழ்கால, எதிர்கால விவரிப்பும் விளக்கமும் வேண்டும். இது தான் வரலாறு. வளர்ந்த, வளரும் படைப்பாளிகளைத் தனது இதழில் இணைத்துக் கொண்டு ஆக்கங்களை வெளியிட வேண்டும். வியாபார நோக்கம் முதன்மைப் பட்டிருக்காது இலக்கு நோக்கிய கருத்துச்செறிவுடையதாக இதழ் வெளியிட வேண்டும். இதழின் பக்க எண்ணிக்கையோ, அமைப்போ மிக முக்கியமில்லை: ஆனால் ஒவ்வொரு பக்கமும் தனித்துவத் தோடு, கலைநயத்தோடு காட்சிப்படுத்தப் பட்டிருக்க வேண் -டும். இதழாளர்கள் வளர, உயர வாழ்த்துக்கள்.

1997 இல் தொடங்கித் தொடர்ந்து, பரிசும் பாராட்டும் பெற்ற எட்டு இதழாளர்களுக்கும் என் அன்பு வாழ்த்துக்கள்.

பொள்ளாச்சி நசன்

படிப்பகம்

www.padippakam.com

# இதழ்களும், பதிவுகளும்.

(பரிசும் பாராட்டும் பெற்ற இதழ்கள் பதித்த தடங்கள்)

தென் செய்தி, மயிலை.

திங்களிருமுறை செய்திமடலாகத் (19-1-97) தமிழர் திரு நாளில் தொடங்கப்பட்டு 23 இதழ்களை வெளியிட்டுள்ளது. நாளிதழில் பாதி அளவில், வெற்றிக்குமேல் வெற்றி பெறும் புலிகளின் செய்திகளோடு இதழ் தொடங்கி, தமிழ் இனத்தின் ஒடுக்குதலான, சிங்கள இராணுவத்தின் அடக்கு முறைகளை, படுகொலைகளை, வல்லுறவுகளை - எதிர்த்துப் போராடுகிற புலிகளை விவரிக்கின்றது. உலகலாவிய தமிழர்களின் ஒருங் -கிணைப்பையும், தமிழக / வெளி மாநிலங்களின் ஈழத் தமிழர் ஆதரவு நடவடிக்கைகளையும் இதழில் வெளியிட்டுள்ளது. தமிழக, இந்திய அரசியலின் போக்குகளை, மாறுதல்களை விவரித்துள்ளது. புது தில்லியில் நடந்த ஈழத்தமிர் ஆதரவு சர்வதேச மாநாட்டுச் செய்திகளை இதழ் 23 இல் வெளியிட்டு உள்ளது. சிறப்பாகத் தொடருகிற இவ்விதழ் பரிசுக்குரியதே.

தேனாறு. சென்னை-7

தன்னிகரற்ற தமிழ்த்தாயே நீ தரணி அள்வாயே என்ற ஆசிரியரின் கவிதையுடன், சனவரி 97 இல் தொடங்கிப் 12 இதழ்களை வெளியிட்டுள்ளது. பலவகை மரபுப்பா - வொடு புதுமைத் தென்றல் என உரைவீச்சும் இடம் பெற்றுள்ளது. வெண்பா வியப்பு என வெண்பாக்களும், இதற்கென்ன பதில் என, பா தொடர்பான வினா விடை பகுதியும் உள்ளன. நிகழ் -வுக் கவிதைகளை முதல் பக்கத்திலும், எண்ணம் எனத் தலை -யங்கக் கவிதைகளை உள்ளேயும் ஆசிரியர் எழுதியுள்ளார். தமிழன்பனின் தமிழ்ப் பாவை தொடரும், அண்ணா கண்ண னின் இதழ்தோறும் ஓர் இனிப்பு தொடரும் தரமானவைகளே தமிழ்த் தொண்டர் கோ.முத்துப்பிள்ளை எழுதுகிற ஒருசொல் கேளீர், உரைநடையில் ஓர் தூயதமிழ்ச் சொல்லை விளக்குகி றது. கலைவிளக்கு வீடியோ சஞ்சிகை சார்பில் ஜெர்மெனி சென்று மா. செங்குட்டுவன் ஆற்றிய உரையின் சுருக்கத்தை டிசம்பர் இதழ் உரைநடையாகத் தந்துள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

[நம்மஊரு] யாதும் ஊரே. பம்மல், சென்னை.

சனவரியில் தொடங்கி 8 ஆவது இதழ்வரை நம்ம ஊரு எனவும், பிறகு பதிவுபெற்று யாதும் ஊரே எனவும் வெளியிட்டுள்ளது. இதழின் அட்டையில் பிரச்சனைகளைச் சுட்டுகிற கார்ட்டூன்களை ஆக்கியுள்ளது. தமிழ்/ தமிழர்/ தமிழ்நாடு என இயங்குகிற இதழிது. முகம் மாமணியின் சிறுகதை,துணுக்குச் செய்திகள், புத்தக விமர்சனம், மாணவர் பக்கம் கவிதை- என வெளியிட்டுள்ளது. சி.என்.ஏ.பரிமளம், பிரபஞ்சன், வி.சேகர், அருள்மொழி ஆகியோரின் பேட்டியும் தந்துள்ளது. நல்லன செய்கிறவர்களைப் பாராட்டவும், கொள்கைக்காக இயங்கு பவர்களை அறிமுகப்படுத்தவும் செய்கிறது. அறிவியல் உண் மைகளைச் சுட்டிக்காட்டி, மூடப்பழக்கங்களை எதிர்த்துள்ளது சுரண்டல் லாட்டிரி, பான்பராக் எதிர்ப்பையும், தமிழ் மருத்து வத்திற்காக அதரவையும் காட்டியுள்ளது. தமிழுக்காக இயங் -கிய பம்மல் சம்பந்தனார், காண்டேகர், மறைமலையடிகள், திரு.வி.க, பெரியார், சங்கரலிங்கனார், கி.ஆ.பெ., பற்றிய குறிப்பை வெளியிட்டுள்ளது. ஈழத்தமிழர்களுக்காக ஆதரவுக் குரலெழுப்புகிற வகையில் ஒவ்வொரு இதழிலும் படைப்புகள் வெளியிட்டுள்ளது. நடக்கிற நிகழ்வுகளை உற்று நோக்கி, அதிலிருந்து தமிழ் /தமிழர் முன்னேற்ற ஒளிக்கீற்றுகளைப் பிரித்தெடுத்துக் காட்சிப் படுத்துகிற பரிசுபெற்ற இதழிது.

[பெரியார் முரசு] புரட்சிப் பெரியார் முழக்கம். சென்னை.

ஏப்ரல் 97 இல் பெரியார் முரசு எனத் தொடங்கப்பட்டு செப்டம்பரில் பதிவு பெற்றுத் தொடர்ந்து வருகிற இதழ். தந்தை பெரியாரின் கொள்கைகளை விளக்குவதற்காகவும், ஒடுக்கப்பட்டவர்களுக்காகக் கிளர்ந்தெழவும்- பெரியார் திரா விடர் கழகம் வெளியிடுகிற செய்தி மடல். பார்பன ஆதிக்கத் தலைமைகளின் ஒடுக்குகிற செயலையும், அரசியலின் மக் -கள் விரோதப் போக்குகளையும் காட்டுகிறது. ஈழத் தமிழர் ஆதரவுக் குரலெழுப்பியுள்ளது. வினாயகன் சிலை ஊர்வலத் -திற்கு எதிராக பெரியார் கைத்தடி ஊர்வலம் நடத்தியது. சர்வதேச ரௌடியாகாதே என அமெரிக்காவிற்குக் கண்டனம் தெரிவித்தது. அதிர்ச்சியூட்டும் உண்மையாக, நேரு, ராஜீவ் குறிப்புகளும், சகதோழர்களைக் காட்டிக்கொடுத்த வாஜ்பாய்



படிப்பகம்

www.padippakam.com

எனவும் குறிப்பு வெளியிட்டுள்ளது. பெரியார் சேமித்த பணம் பெரியார் கருத்துப்பரவலுக்குப் பயன்படுத்தாத வீரமணியைச் சாடியுள்ளது. பெரியார் நூல்கள், இதழ்கள் சேகரிப்பு, பாது காப்பின் முக்கியம் உணர்ந்த இதழிது. பெரியார் திராவிடர் கழகத்தின் நிகழ்வுக் குறிப்பு ஏடாகவும் மலர்ந்து வருகிறது.

எழுச்சி தலித் முரசு. சென்னை.

மார்ச் 97 இல் ஆரம்பிக்கப்பட்ட, தலித்சேனாவின் இதழ் தலித் சேனா மாநாட்டுச் செய்தியுடன் தொடங்கப்பட்ட இவ் விதழ் ஒடுக்கப்பட்டவர்களுக்காக எழுதி வருகிறது. முன்பக்க உள் அட்டையில் அம்பேத்கர் கருத்துக்களையும், பின் பக்க உள் அட்டையில் பெரியார் கருத்துக்களையும் கொண்டுள்ளது அம்பேத்சரியல், சமூகநீதி, இயக்கம், அநீதி, மடல்கள், திரிபு வாதம், பெண்ணியம், எழுச்சி, அறிமுகம், ஆய்வு, திறனாய்வு மதவாதம், பிரச்னை, வாழ்வியல், கொடுமை, மீறல்கள், கவிதை, அரசியல், நிகழ்வு, தீர்வு, பதிவு, செயல், தீண்டாமை, தலித்தியம், களஞ்சியம் சிந்தனை, கண்டனம், தவறு, மறுப்பு வலிமை, சாதனை, பெருமை, கொள்கை, எண்ணம்,தொண்டு எதிர்பார்பு, உண்மை, தீர்மானம், நேயம், உரிமை, தூய்மை, அலட்சியம், மொழி, முரண்பாடு, எச்சரிக்கை என்ற தலைப்பு களில் இதழில் கருத்தைச் சேர்த்துள்ளது. எச். அனுமந்தப்பா டாக்டர்பிரேம்பதி, ராம்விலாஸ் பாஸ்வான், கத்தார் - பேட்டி தரமானவைகளே. மக்களின் சிந்தனையை மழுங்கடிக்கிற இதழ்கள் என்கிற நெடுஞ்செழியனது தொடர் வெகுஜன இதழ்களைத் தோலுரிப்பதுவே. பிற இதழ்களின் செய்திகள் வாக்குமூலம் என்ற தொடராகியுள்ளது. தலித் முதல் தலைவ ரான அம்யன் காளி பற்றிய குறிப்பு சிறப்பானதே. ஆர்.ஆர். புனயானி தொடரும், தலித் ஓவியமும் பயன் கூட்டுவதே.

இசைத் தமிழ். சென்னை.

தமிழிசையின் நுட்பத்தையும், உயர்வையும், சிறப்பையும் விளக்குவதற்காகப் புரட்சிதாசனால் தொடங்கப்பட்டு டிச.97 வரை 6 இதழ்களை வெளியிட்டுள்ளது. இயற்றமிழ் மரபு, இயல் இசை மரபு, கூத்திசை மரபு என ஆசிரியர் எழுதுகிற ஆக்கங்கள் நுட்பமானவைகள். ஆராய்ச்சி எனத் தமிழ் இலக் கியங்களில் காணப்படுகிற இசைப் பகுதிகளை ஆராய்ந்து



படிப்பகம்

www.padippakam.com

அறிஞர்கள் எழுதுகிற கட்டுரைகள் தமிழுக்குச் சிறப்புச் செய்பவைகளே. தமிழிசைக்காக இயங்கிய பெரியார், ஆபிரகாம் பண்டிதர், விபுலானந்த அடிகள், பாவேந்தர் படங்களை அட்டையில் வெளியிட்டுத் தலையங்கத்தில் குறிப்பு எழுதியுள்ளது. வரலாறு என தமிழிசை வேந்தர்களின் வரலாறு காட்டுவது பெருமைக் குரியதே.

மானுட விடியல். சென்னை.

மே 97 இல் தொடங்கி அகஸ்ட்டு வரை 8 இதழ்களை வெளியிட்டுள்ள கிருத்துவப் பொதுநிலையினருக்கான மாதம் இருமுறை இதழிது. ராணிசேவியர், அந்தோனி குருஸ் எனச் சிறப்பான குழுவின் துணையோடு மக்களுக்கான விழிப்புணர்வுப் பணியில் இயங்கியுள்ளது. இவ்விதழின் சாட்டை எனும் சிறுகுறிப்பு யோசிக்கத் தூண்டுவதே. இவ்விதழின் கார்ட்டூன் மிகப்பெரிய செய்திகளை நிமிடத்தில் உணர்த்துபவைகள். திரு அவைச் செய்திகளும், ஞாயிறு சிந்தனைகளும் உண்மை உணர்த்துபவைகள். சாதிக்கல்வரம், தலித் விடுதலை, சூழல் பாதுகாப்பு எனக் கிளர்ந்தெழுவதும், ஈழத்தமிழர்களுக்காகக் கண்ணீர் வடிப்பதும் காண்கிறோம். இதழிலுள்ள மதிப்பீட்டுக் கல்வி பற்றிய கட்டுரை மிகச் சிறப்பானதே.

தாரகை. வத்தலக்குண்டு,

மார்ச் 97 இல் தொடங்கி நவ-டிச. வரை 7 இதழ்களை வெளியிட்டுள்ளது. நன்மைகள் விளைய நண்மைகள் செய்வோம் எனத் தலைப்பிலிட்டுக் - கவிதைகள், குறிப்பு, நூல் அறிமுகம், கடிதம் என 10 பக்கங்களில் தொடர்ந்த இதழ். உரைவீச்சுக்கு முதலிடம் தந்ததுடன் ஹைகூவையும் வெளியிட்டுள்ளது. கவிதைப் போட்டியும் நடத்தியுள்ளது. ஆரம்பக் கட்ட எழுத்தாளர்களையும், புதுவை தமிழ்நெஞ்சன், முரு-கேஷ் என நுட்பப் படைப்பாளிகளையும் இதழில் இணைத்துள்ளது. அர்வத்தோடு தொடங்கித் தொடர்ந்த இந்த இதழ் இளைஞர்களது முயற்சி. இது தொடர வாழ்த்துவோம்.

---

★ இந்த எட்டு இதழ்களும் இந்த ஆண்டின் பாராட்டுக்குரிய இதழ்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

இதழ் தொடர வாழ்த்துவோம்.



படிப்பகம்

www.padippakam.com

## 1997 இல் சிறப்பாகத் தொடங்கிய இதழ்கள்

அலைகள். ஏ.பி.வள்ளிநாயகம். புதுரயில்வே நிலைய தெரு, கும்பகோணம். தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களாகிய நம்மிடையேயுள்ள அனைத்து பலவீனங்களையும் வென்-று, புத்தர், புலே, அம்பேத்கர், அயோத்தி தாசப் பண்டிதர் இரட்டைமலை சீனிவாசன், பெரியார், சிங்கார வேலனார், பால சுந்தரராசு, இமானுவேல் வழி, பயணம் தொடருவோம் எனச் சூளுரைத்து பெரியார் 119 ஆவது பிறந்த தினத்தில் இவ்விதழ் தொடங்கப்பட்டது. முதல் இதழ் மும்பை கலவரக் குறிப்பு, பகவதி தேவி எம்.பி. பேட்டி, சேகுவரா கட்டுரை, சிறுகதை, பத்மினிவழக்கு எனத் தரமாகத் தொடங்கப்பட்டது

அகவிழி. காஞ்சனை ஃபிலிம் சொசைடி, 102 வடக்கு ரத வீதி, திருநெல்வேலி. திருவனந்தபுரம் படவிழாவில் 1/97 வெளியிடப்பட்ட சினிமாக் காலாண்டிதழ்.ஒவ்வொரு பக்கமும் இலக்கியத் தரமான சினிமாச்செய்திகளை, பிறமொழியாக்கங்களைக் கொண்டுள்ளது. இந்தியன் படம் பற்றிய விமர்சனம் புதுமையானது.சந்துரு ஓவியம், நகுலன் படம் ஈர்ப்புடையதே

அதிர்வு. நா.சண்முகநாதன், 22/பி அன்சாரி நகர், மதுரை 10. 97 ஜனவரியில் தொடங்கி 5 இதழ்களை வெளியிட்டுள்ள ஏகாதிபத்ய எதிர்ப்பிதழிது. பின்தங்கிய, வளரும் நாடுகளைப் பல்வேறு கவர்ச்சிகரமான வழிகளில் சூறையாடு-கிற ஏகாதிபத்யத்தின் ஏமாற்றுச் செயல்களைச் சுட்டிக் காட்டியும், சுரண்டப்படுகிற நாட்டின் - மக்களின் நிலையை விவரித்தும் கட்டுரைகளைத் தருகிறது. கவிதைகளும் உள்ளன.

ஆசைகள். கீதாலயன், 55.பக்தபுரித்தெரு,கும்பகோணம்

உள்முகம். மனோரன்ஜன், 11871/9 சேட்நகர்,கரோல் பாக், புதுடெல்லி 5. கவிதைகளுக்கான காலாண்டிதழ். கவி-தைகள் சார்ந்த கட்டுரை, மதிப்புரை, கவிஞர்களின் நேர்காணல், நாட்டுப்புறப் பாடல்கள், மொழி பெயர்ப்பு என்று படைப்பாக்கங்களை வெளியிட விரும்பித் தொடங்கிய இதழ்.


படிப்பகம்

www.padippakam.com

உண்மை ஹோமியோபதி. அ.ந.வணங்காமுடி, ஹெல்த் வெளியீடு. 10.உசேன் சாகிப்தெரு, வில்லாபுரம், மதுரை 12. அக்.97இல் ஹோமியோபதி தொடர்பான விளக்கங்களையும் மருத்துவக் குறிப்புகளையும் பரவலாக்குவதற்காகத் தொடங் கப்பட்டு 3 இதழ்களை வெளியிட்டுள்ளது. கல்விக் குழுவின் வினாத்தாளும், மருத்துவக் கட்டுரைகளும் பயனாகுபவையே

எண்ணம். அ.முருகேசன், 59.கோபாலபுரம் தெரு, கோவை - 18. பல்சுவையாக மே97வந்த தொழிலாளர் இதழ்

ஓடம். ஜெயசேகரன், 10 பி சுகதேவ் தெரு, பழனி. ஜனவரி 97 தொடங்கி 7 இதழ்களை வெளியிட்டுள்ளது. இலக் கியப் பார்வையுள்ள ஆசிரியரின் கவிதை, கட்டுரைகளுடன், தேர்வு செய்யப்பட்ட தரமான படைப்புகளுடைய மாத இதழ்.

கணை. முகவை. சிதம்பரன், மருது அச்சகம், திருச்சுழி கவிதைகளுக்காகத் தொடங்கப்பட்டு 9 இதழ்களை வெளியிட் டுள்ள மாத இதழ். வெவ்வேறு அளவுகளில் இதழளவுள்ளது. ஆசிரியருக்குப் பிடித்த கவிதைகளை மறுபிரசுரம் செய்தும், வளரும், வளர்ந்த கவிஞர்களின் ஆக்கங்களை வெளியிட்டும், கொள்கையின்றித் தொடர்ந்துள்ளது. படைப்பாளிகளின் முகவரி வந்த சிற்றிதழ்களின் முகவரிகள் எனஅன்போடு அரவணைத் துள்ளது. அடிக்குறிப்புகளாக உயர்கருத்துக்களையும் இதழில் இணைத்து, சிறந்த இதழுக்குரிய தகுதிகளைக் காட்டியது.

கதை சொல்லி. கி.ராஜநாராயணன், 13. 21 வீதி, அவ்வை நகர், புதுச்சேரி.8. இதழ் தயாரானதும் தயாரிப்புச் செலவைச் செலுத்திப் பெறக்கூடிய எண் வழிச் சிற்றிதழ். 3 இதழ்களை வெளியிட்டுள்ளது. மூன்றாவது இதழிலுள்ள பரமபத பாதைகள் சிறுகதை அதிர்வுடன் வியப்பூட்டுவது. கி.ரா.வின் நாட்குறிப்பு, அலிகள் பற்றிய செய்திகள், கதை, நாடகம், நூல் மதிப்புரை என்பவற்றைப் புது வகை ஆக்கிப் புதுப்பாதை போடுகிறார். இரா. கோதண்டராமனின் இலக் கியத்தில் வட்டார வழக்கு இதழின் இலக்கிற்கு உதவுவதே.

கனல் விழிகள் (தேடல் விழிகள்) சுதாகர், வயலோகம், புதுக்கோட்டை. தமிழ் உணர்வுடன் தமிழர் மேம்பாட்டிற்குச் சிந்தித்துத்தொடர்ந்தது. தேடல்விழிகள் பிறகு க.வி. ஆனது.



படிப்பகம்

www.padippakam.com

✠ குழந்தை நலச் செய்தி. ஈசா அஞ்சல், 632 209. குழந்தைகள் நலம், நோய்த்தடுப்பிற்கான இலவச மடல்.

✠ தலித். ரவிக்குமார், அ.பெ. எண்: 11, நெய்வேலி 1. தரமான மொழி பெயர்ப்புச் சிறுகதைகளைப் பாவண்ணன் தந்துள்ளார். சாதி வெறியாட்டம், மனித உரிமை மீறல்கள், ஒடுக்கப்பட்டவர்களின் கிளர்ந்தெழுதல் எனத் தரமான கட்டுரைகளை வெளியிட்டுள்ளது. 3 இதழ்கள் தரமாக வந்துள்ளன முதல் இதழ் கண்டு அசோகமித்திரன், ''பல பிரிவுகளில் ஒரே பொருளைப் பற்றி கதை, கட்டுரைகள் சிறப்பாகத் தேர்ந்தெ -டுத்திருக்கிறீர்கள். இதே தரத்தில் ஒவ்வொரு இதழையும் தயாரிப்பது சாத்தியமா என வியப்பாக இருக்கிறது'' - என்று வியக்கிறார். வெளியான 3 இதழ்களும் தரமானவைகளே.

✠ தன் முன்னேற்றம் நம் பிறப்புரிமை. பா. இராமமூர்த்தி 1/429 மலைநோக்கு குடியிருப்பு, ஜி.எஸ்.டி,சாலை, வண்டலூர் ரயிலடி, சென்னை 48. தாழ்ந்து கிடக்கும் தமிழகத் தமிழனின் எண்ணத்தை உயர்த்தி, பொருளாதாரத்தில் வளர்த்த விரும்புவதோடு, இளம் நாற்றுக்களான மாணவர்களை உற்சாகப்படுத்தி உயர்த்த எண்ணமிட்டுத் தொடங்கியது.

✠ தலித் உரிமைக் குரல். மோகன்தாஸ், 9 - 116 நேரு காலனி, தொப்பம்பட்டி அஞ். கோவை 17. ஒடுக்கப்பட்ட தலித் இனத்திற்கான எழுச்சிக் குரலாய்க் கையால் எழுதிப் படப்படி எடுத்துச் சுற்றுக்கு விடப்படுவது. நவம்பர் 97 வரை 5 இதழ்கள் வந்துள்ளன. வெள்ளைத் தாள் அளவுடையது.

✠ தமிழ் மூவேந்தர் முரசு. 29/2 சீனிவாச பெருமாள் சன்னதி தெரு, சென்னை14. மூவேந்தர் முத்து வெளியிட்ட இதழ்.

✠ நாளை விடியும். வைகறை தாசன், 1|120 ஆலங்குடி சாலை, சே.குளவாய்ப்பட்டி, புதுக்கோட்டை. இருமாத இதழாக நவ-டிச 97 படப்படி இதழாகத் தொடங்கி ஜன 98 இல் அச்சு இதழாகி, ஆர்வத்தோடு தொடருமிதழ்.

✠ நிலவரம். சித.சிதம்பரம், 27|32 எம்.ஆர். காம்ப்ளக்ஸ், நூறடி ரோடு, காரைக்குடி 2, (நண்பர்வழிக் கிடைத்த இந்த இதழோடு பல்முறை தொடர்பு கொண்டும் பதிலில்லை) இம் முதலிதழ் நாட்டரசன்கோட்டை பற்றியும், மதிப்புரை, சிறு



படிப்பகம்

www.padippakam.com

கதை, கவிதை, பேட்டி என வெளியிட்டுள்ளது. இரண்டாவது இதழில் விளையாட்டு, நூல் அறிமுகம், சிறுகதை, கவிதை, தொழில், கல்விச் செய்தி, சினிமாக் குறிப்பு குன்றக்குடி அடிகளார் பேட்டி, சுற்றுலாக் குறிப்பு எனப் பல்சுவையை செறிவுடையதாகத் தருமிதழ்.

பிரகடனம். 28பி பட்டரமண தீர்க்கம் தெரு, இராமேஸ்வரம். இலக்கிய வட்டக்கின் இணைப்பிற்காக வரும் படப்படி இதழ். 3 இதழ்கள் வெளியாகியுள்ளன.

புதிய விடியல். அணிக்குறிச்சி, சுத்தமல்லி. அஞ்.621804

புதிய சங்கமம். மக்கள் ஒற்றுமை இயக்கம், வடகரை, பெரியகுளம், தேனி. ஜூலை தொடங்கி 3 இதழ்கள் வந்தன.

பெரியார் நாடு. கு.ராமகிருட்டிணன், திராவிடர் கழகச் செய்தி மடல். அரசு விரைவுப் பேருந்து நிலையம் அருகில், கோவை 44. அக். 90 இல் தொடங்கி 2 இதழ்களை வெளியிட்டு நிறுத்திக் கொண்ட இவ்விதழ், மீண்டும் ஏப். 97 இல் தனது முதல் இதழைத் தொடங்கி டிச.97 வரை 9இதழ்களை வெளியிட்டுள்ளது. கடலூர் மாநாட்டுக் குறிப்புடன் தொடங்கப்பட்ட இவ்விதழ், சங்கமித்ரா கட்டுரை, கழகச் செய்திகள், கழக நிகழ்ச்சிகள், பகுத்தறிவுக் குறிப்புகள், பிற இதழ்களின் கார்ட்டூன் மறுபிரசுரம், பெரியார் கருத்துக்கள் எனத் தொடருகிறது. ஆபிஸ் பையனின் உரையாடல், விவேகனின் வினா விடைக் குறிப்பும் சிந்திக்க வைப்பதே.

பொருளியல் உரிமை. குமரி மைந்தன், 12. தெற்குச் சடை வீதி(மாடி) பாளையங்கோட்டை. 2. தமிழக மக்களின் பொருளியல் உரிமைக் கழகத்தின் சார்பில் ஜன. 97 தொடங்கப்பட்டு 4 இதழ்களை வெளியிட்டுள்ளது. வருமான வரியை ஒழிப்போம், உள்நாட்டு மூலதனத்தைப் புரப்போம், வெளிநாட்டு மூலதனத்தை வேரறுப்போம் எனத் தலைப்பிலிட்டுப் பொருளியல் நுணுக்கக் கட்டுரைகளையும், பொருளியல் செய்திக் குறிப்புகளையும் வெளியிட்டு வருகிறது. இயக்கச் செய்திகளும் உள்ளன. தெளி தமிழில் புதிய மற்றும் மறைக்கப்பட்ட செய்திகளை விவரிப்பது இதன் சிறப்பு.



படிப்பகம்

www.padippakam.com

★ மனிதம். அஸ்-ஸிராஜ் மகா வித்யாலய உயர்தர மாணவர்களின் காலாண்டிதழ். அக்கறைப்பற்று 1. சிறுகதை, நேர்காணல், கட்டுரை, கவிதைகள், ஓவியம் எனச் சிறப்பாக வெளியிட்டுள்ளது. பாடசாலை அதிபர் அபுல்ஹசன் தனது நேர்காணலில் ஆசிரியரது பணிகள் பற்றிச் சிறப்பாக விவரித்துள்ளார். எஸ்.எல்.ஹபீலின் யுத்தம் தொடர்பான கட்டுரை நுட்பமாக உண்மையைச் சுட்டி வரலாறு காட்டுகிறது.

✖ மக்கள் பண்பாடு. எம்.ஜி.மதியழகன், 150 வரதம்மாள் தோட்டம், முதல் தெரு, (2 ஆவது மாடி) கீழ்ப்பாக்கம், சென்னை.10. ஜனவரியில் தொடங்கி 6 இதழ்களை வெளியிட்டுள்ளது. நண்பர்கள் குழுவோடு ஒதுக்கப்பட்டவர்களுக்காகக் கிளர்ந்தெழுகிற இதழிது. கவிதைகள், செய்திக் குறிப்புகள், ஞான வெட்டியானின் வரலாற்றுச் சான்று விவரிப்பு எனத் தொடர்ந்தது. பக்கங்கள் கலைநயத்தோடு அமைந்துள்ளன.

✖ மக்கள் மலர். 82|96 புதுப்பாலம் சமீபம், வடகரை, பெரியகுளம். ஜனவரியில் தொடங்கி 6 இதழ்களை வெளியிட்டுள்ளது. மக்களை இணைத்து மன்றம் கண்டு தொடருவது.

✖ மகுடம். ம.ந.வடிவேலு, காகாபாளையம், சேலம். 3 இதழ்கள் ஒரு பாலிமார்ஃபின் முன், பின் அச்சாகி வந்தது.

✖ முல்லைக் கொடி. 8/250 தேவேந்திர வீதி, இராமநாதபுரம், கோவை 45. ஞானியின் தொடர் கட்டுரையுடன், கதை கவிதை, கட்டுரை, துணுக்குகளுடன் இலக்கியம் படைக்க விரும்புகிற இதழ். இதுவரை 6 இதழ்கள் வந்துள்ளன.

✖ வக்கீல் செய்தி. 39. பஜனை மடம் வீதி, புதுச்சேரி 3.

✖ வைகை எக்ஸ்பிரஸ், 61 காகா தோப்புத்தெரு, மதுரை நாளிதழ் அளவில் மாத இதழாக, செய்தி வெளியிடுவது.

✖ வேள்வி. சமத்தூர், பொள்ளாச்சி. மே 97 தொடங்கப்பட்டு 2 இதழ்களை வெளியிட்டுள்ளது. சிறுகதை, கவிதை, கட்டுரை என முதல் இதழிலும், 2 ஆவது இதழில் கடிதங்கள் மதிப்புரை என வெளியிட்டுள்ள இலக்கிய நேயரிணைப்பிதழ்.

● பயணம். 189. 2வது முதன்மைச் சாலை, கே.ஹெச்.பி. காலனி, பஸ்வேஸ்வரா நகர், பெங்களூர். மே 97 தொடங்கி


படிப்பகம்

www.padippakam.com

கணனி வழி ஒரு படியெடுத்து, அதனைப் படப்படியெடுத்துத் தனிச்சுற்றுக்கு விடுவது. கருத்துக்களை உள்ளடக்கிய இதழ்.

✲ தமிழ்த் தேசம். தியாகு, நாத்திக நந்தனார், ஒட்டேரி, வண்டலூர், சென்னை 48. டிச 97இல் தொடங்கி 2 இதழ்கள் வெளியிட்டுள்ள தமிழ் தமிழர் இயக்கத்தின் திங்களிதழ். தமிழுக்காகவும், தமிழருக்காகவும் சிந்தித்து இயங்குகிற இதழிது தில்லியில் நடந்த சர்வதேசத் தமிழர் மாநாடு, சுப.வீ.தொடர் தீர்வுப்பொதி விளக்கம், சாதிவெறிச்சாடல், ஏமாற்றப்படுகிற தமிழர்கள் என, தரமான கட்டுரைகளும் தொடரும் உடையது

✲ உலகத் தமிழ் அரங்கம். அரையாண்டிதழ், 32. கங்கை அம்மன் கோவில் தெற்கு முதல் வீதி, நுங்கம்பாக்கம், சூளை. பளபளக்கும் அட்டையுடன் ஜூலை, 97 ஆரம்பிக்கப்பட்டது. சிறுகதை, கவிதை, கட்டுரை, கடிதம், பத்தக அறிமுகம் என ஆரம்பத் தன்மையில் அழகிய அச்சில் வெளிவந்துள்ளது.

(●) 1997 இல் தொடங்கி வெளியான 42 இதழ்கள் பற்றிய குறிப்பு இது. எனக்கு வந்த இதழ்களை இணைத்துள்ளேன். விடுபட்ட இதழ்கள் இருப்பின் அருள்கூர்ந்து தகவல் தரவும்.

● 1998 இல் தொடங்கப்பட்ட இதழ். ●

(✲) ஒடுக்கப்பட்டோர் குரல். சங்கமித்ரா, 1 | 429 மலை நோக்கு குடியிருப்பு, ஜி.எஸ்.டி. சாலை, வண்டலூர் ரயிலடி, சென்னை 48. நூல் விமர்சனம்/சிற்றிதழ்களின் அறிமுகம் மிக சிறப்பாக முகப்பு அட்டையுடன் உள்ளது. சுதந்திரப் பொன் விழா ஆண்டின் கண்கொள்ளாக் காட்சிகள் என நாளிதழின் புகைப்படத்தை மீள் பிரசுரம் செய்து சுதந்திரமின்மையைக் காட்டுவது அருமை. பட்டம் சிறுகதை யோசிக்க வைப்பதே. பெரியார் சிந்தனைகளைக் கன்னடத்தில் வெளியிட விரும்பும் திரு. ப.வேலாயுதன் அவர்கள் பாராட்டிற்குரியவரே.

[✓] 1997 ஆம் ஆண்டிற்கான ''சாகித்ய அகாடமி'' விருது தமிழுக்குத் தோப்பில் முகமது மீரானுக்கு, அவர் எழுதியுள்ள சாய்வு நாற்காலி நாவலுக்காக வழங்கப்பட்டுள்ளது. இவர் அகடமி விருது பெறுகிற 37 ஆவது தமிழ்ப் படைப்பாளி. ஒரு கடலோர கிராமத்தின் கதை, கூனன் தோப்பு, துறைமுகம் என்ற நாவல்களையும் இவர் எழுதியுள்ளார்.



படிப்பகம்

www.padippakam.com

## சர்வதேச அளவில் தமிழ் ஒலிபரப்பும் வானொலிகள்

| | | | |
|---|---|---|---|
| அதிகாலை | 0215 - 0630 | மலேசிய வானொலி. 60 மீ(சி.அ) |
| | 0300 - 0800 | சிங்கப்பூர் வானொலி 41 மீ |
| காலை | 0530 - 0600 | டிரான்ஸ் வேர்ல்டு 882 (ம.அ) |
| | 0530 - 0615 | அகில இந்திய வானொலி, 31,60 |
| | 0600 - 0625 | வேரித்தாஸ் வானொலி. 31 |
| | 0630 - 0650 | வத்திகான் வானொலி. 41, 31 |
| | 0641 - 0810 | ஃபீபா வானொலி. 41 |
| மாலை | 0400 - 0500 | பாகிஸ்தான் வானொலி. 22, 19 |
| | 0400 - 1100 | சிங்கப்பூர் வானொலி. 41 |
| | 0500 - 0700 | அசிய சேவை இலங்கை. 41, 25 |
| | 0645 - 0715 | ஃபீபா வானொலி. 31. |
| இரவு | 0730 - 0745 | டிரான்ஸ் வேர்ல்டு. 25. |
| | 0730 - 0830 | சீன வானொலி. 31, 25. |
| | 0730 - 0800 | வேரித்தாஸ் வானொலி. 31. |
| | 0805 - 0845 | டிரான்ஸ் வேர்ல்டு. 882 (ம.அ) |
| | 0830 - 0930 | அட்வண்டிஸ்ட், 41. |
| | 0840 - 0900 | வத்திகான் வானொலி. 31, 25. |
| | 0915 - 0945 | பி.பி.சி. தமிழோசை. 31, 41, 49. |
| ● காலை | 0630 - 0730 | சர்வதேச ஒலிபரப்பு லண்டன். 41 |

தொகுப்பு:— ARDIC DX CLUB.
தங்க.ஜெய்சக்திவேல். பெரியாத்து கள்ளிவலசு. 638 672.

---

புதுவை ஸ்ரீ சுஜன ரஞ்சனி புத்தகம் 38. எண் 5. 30-1-1930 இதழில்
(⚙) ஆகாய விமானம் என்ற தலைப்பில் வெளியான செய்தி.

சில காலத்தின் முன் இரண்டு தடவை வெவ்வேறான ஆகாய விமானங்கள் நமதூர் ஆகாய மார்க்கமாய்ப் பறந்து சென்றபோது பல ஜனங்கள் கண்டும் காணாமலும் அவாக் கொண்டிருந்தனர். இப்போது நமது சொந்த பிராஞ்சு தேச விமானம் வந்திறங்குவதைப் பற்றி நேரத்தைக் குறிப்பிட்டுப் பொதுஜனங்கள் ஏமாறாமல் கண்டானந்திக்கும்படி அரசாங்க தலைவர் கிருச்சுக் கொட்டச்செய்து தெரிவித்தது கருதத்தக்க தேயாம். ஆகாய விமானியர்களும் பொது ஜனங்கள் தெளிவாய்ப் பார்க்கும்படி, உயர்ந்தும், தாழ்ந்தும், சுற்றிச் சுற்றிப் பறந்து காட்டியது பாராட்டத்தக்கதாம். (இன்று நிலை?)


படிப்பகம்

www.padippakam.com

(✿) 1995 சனவரியில் தொடங்கப்பட்டு, காலாண்டிதழாக டிச. 97 வரை 7 இதழ்களை வெளியிட்டுத் தன் பயணத்தை முடித்துக்கொண்ட " பறை " இதழின் இழப்பு வருந்துதற்குரியதே. ஒடுக்கப்பட்ட தலித்கிருத்துவர்களுக்காகச் சிந்தித்து இயங்கிய இவ்விதழின் சாதனை மறக்கவியலாததே.

(❀) மதுரை ஹோமியோபதி நண்பன் மீண்டும் வருகிறது.

● [குமரன் பதிப்பகம் வெளியிட்ட வரதர் கதைகள் நூலில் வரதர்]

● கவிதையோ, காவியமோ, கட்டுரையோ, நாடகமோ நாவலோ உருவத்கில் அது எப்படியிருந்த போதிலும் அதை இலக்கியம் என்று சொல்வதற்கு 2 தகுதிகள் இருக்கவேண்டும்

முதலாவது அதில் ஒருஇலக்கு வேண்டும். அந்த இலக்கு மனிதனுடைய அகத்தையோ, புறத்தையோ உயர்த்துவதாக அமைய வேண்டும். மற்றது, அதைச் சொல்லும்விதம், நடை கட்டுக்கோப்பு ஆகியவற்றில் சுவை இருக்க வேண்டும்,

இந்த இரண்டில் ஏதாவது ஒன்று இல்லாமற்போனாலும் அதை இலக்கியம் என்று கொள்ள முடியாது. பாடப் புத்தகத்தில் நாங்கள் படித்த நல்லொழுக்கம் என்ற கட்டுரையில் சிறந்த இலக்கு இருந்தபோதிலும், சமீபத்தில் ஒரு வார இதழில் படித்துவிட்டுச் சிரிசிரியென்று சிரித்த ஒரு விகடத்துணுக்கில் சுவை இருந்தபோதிலும் - இவற்றை நாம் இலக்கியம் என்று ஏற்றுக்கொள்ள வில்லையல்லவா ?

● [சரிநிகர் இதழ் 137க்கு குப்பிழான் சண்முகம் அளித்த பேட்டியில்]

● யாழ்ப்பாணத்தில் உதயன் மட்டும்தான் வெளிவருகிறது. பெரும்பாலும் விளம்பரங்கள்தான். செய்திகளில் ஒரளவுக்குச் சகல பக்கங்களையும் வெளிப்படுத்தும் தன்மை இருக்கிறது. அனாலும் முழுமையான சுதந்திரச்சூழல் என்று சொல்வதற்கில்லை. புலிகளின் வானொலிச் செய்திகளையும், புலிகளின் வானொலி இப்படிக் கூறுகிறது என்றும் குறிப்பிட்டுப் போடுவார்கள். சஞ்சிகைகள் என்று ஒன்றுமேயில்லை. இப்போதுதான் சஞ்சீவி வரத் தொடங்கியுள்ளது(உதயன் பத்திரிகையின் சனி வாரமலர்). சஞ்சீவியில் நல்ல சிறுகதைகள், கவிதைகள் வருகின்றன. அண்மையில் வெளியான முடநடை (யாழ்ப்பாணத்திலிருந்து பஸ்ஸில்ஏறி வீடுபோய் சேரும்வரையிலான ஒரு பயணியின் உணர்வுக் கதை) நான் ரசித்தகதை.



படிப்பகம்

www.padippakam.com



# சிற்றிதழ்கள் செய்ததும்: செய்யத் தவறியதும்.

## தொடர் எண் : 12

— திரு. வல்லிக்கண்ணன். —
(10.ஏ டைப் பிளாட்ஸ், வள்ளலார் மார்டர்ன் பிளாட்ஸ்,
புதுத் தெரு, லாயிட்ஸ்ரோடு, சென்னை 5)

பழைய சிற்றிதழ்கள் சிலவற்றின் ஏதாவது ஒரு சில இதழ்களைப் பார்க்க நேரிடுகிறவர்கள் வியப்புடன் கூறுகிறார்கள்: ஆழ்ந்த, கனமான விஷயங்களைத் தந்திருக்கிறார்கள், அப்படித் தருவதில் அக்கறை காட்டியிருப்பது நன்றாகத் தெரிகிறது என்று.

சமீப சில வருடங்களில்தான், மூன்று வரிக் கவிதைகளை மிகுதியாக அச்சிட்டு, "இலக்கியம் பண்ணுவதாக" திருப்தி அடைந்துவிடும் ஒரு மனநிலை சிறுபத்திரிகைக்காரர்கள் பெரும்பாலருக்கு ஏற்பட்டுள்ளது. நான்கு பக்கங்கள், எட்டுப் பக்கங்களில் இதழ் தயாரித்து "நாங்களும் பத்திரிகை நடத்துகிறோம்" என்று பெருமைப் பட்டுக்கொள்ளவும் முடிகிறது.

1960கள் 70களில் வெளிவந்த சிற்றிதழ்கள்பலவும் அதிகப் பக்கங்களோடும், தரமான, கனமான விஷயங்களோடும் அமைந்திருந்தன. சிறுகதை, கவிதைகளோடு, ஆழ்ந்த சிந்தனைகளை வளர்க்கும் கட்டுரைகள், மொழிபெயர்ப்புகள், என்று தருவதில் பத்திரிகை நடத்தியவர்கள் ஆர்வம் காட்டினார்கள். சில இதழ்கள் தொடர்கதைகூட வெளியிட்டன.

பன்னிரண்டு வருடங்கள் 'எழுத்து' பத்திரிகையைத் தனித்தன்மையுடன், மன உறுதியோடு நடத்திய சி.சு. செல்லப்பா

www.padippakam.com

அடிக்கடி சொல்லுவார்: சிறுபத்திரிகை என்றாலும் அது பலத்த தாக்கம் ஏற்படுத்த வேண்டும். புதிய இயக்கத்துக்கு அடிகோல வேண்டும். மணிக்கொடி சிறுகதை இலக்கிய வளர்ச்சிக்கு வழிவகுத்தது. எழுத்து புதுக்கவிதை இயக்கத்துக்கு உதவியது. அதன் பிறகு சிற்றிதழ் நடத்துகிறவர்கள் அப்படி ஒரு உத்வேகத்தோடு, இலட்சிய நோக்கோடு பத்திரிகை நடத்த வேண்டும் என்று ஈடுபடுவதாகத் தெரியவில்லை.

சி.சு.செல்லப்பாவின் விமர்சன நோக்கு வரம்புகளுக்குட் பட்டது. அவர் எதையும் எளிதில் ஏற்றுக் கொள்வதில்லை. மணிக்கொடி, எழுத்து போலவே தாக்கம் ஏற்படுத்திய சிற்றிதழ்கள் தமிழ்நாட்டில் வராமலிருந்ததில்லை.

புதுக்கவிதையிலேயே சமூக உணர்வுடன் கவிதை எழுதுவதற்கு மிகுந்த இயக்கவேகம் கொடுத்தது வானம்பாடி. சரஸ்வதி, தாமரை, செம்மலர் முற்போக்கு இலக்கியஇயக்கம் இயக்க வேகமும், வளர்ச்சியும் பெறுவதற்குப் பெரிதும் உதவியுள்ளன. நா.வானமாமலை நடத்திய ஆராய்ச்சி, மார்க்சியப் பார்வையோடு ஆய்வுகள் செய்வதற்கும் இலக்கிய விமர்சனம் எழுதுவதற்கும் உந்து சக்தியாகத் திகழ்ந்தது. கோவை ஞானியின் நிகழ் தனித்தன்மையோடு செயலாற்றியது. கொல்லிப்பாவை, யாத்ரா, கல்குதிரை குறிப்பிடப்பட வேண்டியவை

புதிய தடம் அமைத்து, இலக்கிய இயக்கம் தோன்ற வழி வகுக்காத போதிலும், அதனதன் தன்மையில் தரமாகவும், தனிச்சிறப்போடும் அநேக சிற்றிதழ்கள் இயங்கி வரலாற்று முக்கியத்துவம் பெற்றிருக்கின்றன. நடை, ஞானரதம், அஃக் கசடதபற, சுவடு, இனி, புதிய நம்பிக்கை, முன்றில், கனவு, விருட்சம், சதங்கை, நண்பர் வட்டம், காலச்சுவடு, கவிதா சரண், தாராமதி, சுந்தர சுகன் - இப்படிப் பல.

தீபம் அதன் இலக்கியப் பயணத்தில் பாராட்டுதலுக்குரிய சாதனைகள் பல புரிந்துள்ளது. கணையாழியும் தனி வரலாற்றுப் பெருமை உடையது.

பூங்குயில், அன்றில் தனிச்சிறப்புடன் வளர்ந்தன. தொடர்ந்து வாழ இயலவில்லை அவற்றால். அகரம் எனும் புதுச்சேரிச் சிற்றிதழும் இவ்வகையில் சேரும். தொடரும், பூம்புனல் மன்னுயிர், கவிக்காவிரி தடம்பதிக்க ஆர்வத்துடன் முயலுகின்றன. நெய்வேலியிலிருந்து வரும் காலாண்டிதழ் வேர்கள் சுய படைப்புகளுடன், மொழிபெயர்ப்பு முயற்சிகளிலும் தீவிர

படிப்பகம்

www.padippakam.com

அக்கறை காட்டுகிறது. இலக்கு தனிச் சிறப்புடையது.

மொழிபெயர்ப்பு பற்றி ஒன்று குறிப்பிட வேண்டும். ஆழ்-ந்த, தீவிரமான, கனத்த த்த்துவ - கலாச்சார - இலக்கியக் கருத்துக்களை மொழிபெயர்ப்பதாகச் சொல்லிக் கொண்டு, தேவையில்லாத- காலத்துக்கும் நாட்டின் கலாச்சாரத்துக்கும் சூழலுக்கும் பொருத்தமற்ற - கட்டுரைகளை, நீளம் நீளமாக தமிழாக்கம் செய்வதில் சிற்றிதழாளர்கள் ஆர்வம் காட்டுவது சகஜமாக இருக்கிறது. இந்தப் போக்கு எழுபதுகளில் மிகுதியாகக் காணப்பட்டது. இப்பவும் இருந்து வருகிறது. நமது நாட்டுப் பண்பாட்டுச் சீரழிவு - கலாச்சாரச் சிதைவு பற்றி - சுயசிந்தனை ரீதியான கட்டுரைகள் எழுதினால் அர்த்தம் உண்டு. அதற்கான தேவையும் இருக்கிறது. நம் சிற்றிதழ் அறிவுஜீவிகள் அதைப் பற்றி அக்கறை கொள்வதில்லை. ஜாம்பியாவின் பாரம்பரியப் பண்பாடும் அதன் சீரழிவும், நைஜீரியக் கலாச்சாரத்தின் சிதைவுகள் என்று எது எதையோ மொழிபெயர்த்துத் தங்கள் பத்திரிகையின் பக்கங்களை நிரப்பினார்கள்.

அதே போல, அமைப்பியல் பற்றி வீண் சர்ச்சைகளைத் தேவையில்லாமல் தொடர்ந்து மொழிபெயர்த்துத் தந்தார்கள் அமைப்பியல் பற்றித் தமிழ்வாசகர்களும் எழுத்தாளர்களும் புரிந்துகொள்ளக்கூடிய விதத்தில் கட்டுரைகள் எழுதினால் - அப்படிப்பட்ட கட்டுரைகளை மொழிபெயர்த்தால் பயனுள்ளதாக இருக்கும். ஆனால், அமைப்பியல் ஆதரவாளர்கள் எது எதையோ மொழிபெயர்ப்பதில் தீவிர உற்சாகம் கொண்டிருந்தார்கள். அமைப்பியலுக்கு அந்த அறிஞர் காட்டிய எதிர்ப்பு.. அந்த அறிஞருக்கு, இந்த அறிவாளியின் பதில்.... அமைப்பியல் பற்றிய பேரறிவாளரின் கருத்து.... இந்த ரீதியில் அரை குறையான விவாதங்களையும், கட்டுரைப் பகுதிகளையும் மொழிபெயர்த்து, புரியாமலடித்தார்கள் !

அவற்றை மொழிபெயர்த்தவர்கள் 'நாங்கள் ரொம்பவும் படித்திருக்கிறோமாக்கும்!' என்று காட்டிக் கொள்ளத்தான் அவை உபயோகப்பட்டனவே தவிர, தமிழ்ச் சிற்றிதழ் வாசகர்களுக்கு அமைப்பியல் குறித்து எந்த விதமான தெளிவும் ஏற்படுத்தி விடவில்லை. (இன்னும் வரும்)


படிப்பகம்

www.padippakam.com

சிறுவர் இதழ்களின் வரலாறு

காட்டுகிற தொடர் எண்: 2.

டாக்டர். பூவண்ணன்
1. பாரதிபார்க். 4 ஆவது குறுக்கு, சாயிபாபா காலனி. கோவை 11

குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பா காரைக்குடியில் பணியாற்றிய காலத்தில் அங்கே ஒரு குழந்தை இலக்கிய மாநாட்டை நடத்தினார். அதில் கலந்துகொள்ள சென்னையிலிருந்து புறப்பட்டுச் சென்றேன். பொழுது புலருகின்ற நேரத்தில் ரயில் வண்டி ஏதோ ஒரு நிலையத்தில் நின்றது. விழிப்புற்ற நான் இது எந்த நிலையம்? என்று படுத்தபடியே கேட்டேன். " புதுக்கோட்டை " இப்படி நண்பர் சொன்னதும் சடாரென எழுந்தேன். காலணியை அணிந்து கொள்ளவும் மறந்து, வேகமாக வண்டியிலிருந்து இறங்கி, நிலைய மண்ணை மிதித்தபோது என்னுள் ஏற்பட்டஉணர்வு எளிதில் விள-க்க முடியாதது. மகிழ்வும், வியப்பும், திகைப்புமாகச் சுற்றும் முற்றும் பார்த்தேன். புதுக்கோட்டை என்னும் பெயர் மஞ்சள் பின்னணியில் தெரிந்ததை எழுத்துக்கூட்டிப் படித்தேன். பின் குனிந்து அந்த நிலைய மண்ணைத் தொட்டு வணங்கினேன்,

ஆம்! புதுக்கோட்டை, குழந்தை இலக்கிய அன்பர்களுக்கு ஒரு புனிதத்தலம்! வைணவர்களுக்கு திருவரங்கம்போல, சைவர்களுக்குச் சிதம்பரம்போல, கிருத்துவர்களுக்கு ஜெருசலம் போல, இஸ்லாமியர்களுக்கு மெக்கா போல, குழந்தை எழுத்தாளர்களுக்குப் புதுக்கோட்டை ஒரு புனிதத்தலம்.

மனிதப்பிறவியின் புனிதப் பருவமான குழந்தைப் பருவத்தை உருவாக்கும், உவகைப்படுத்தும், உயர்த்தும் குழந்தை இலக்கியத்தை வளர்க்கும் பணிக்குப் புதுக்கோட்டை செய்த தொண்டு பெரின. குழந்தை இலக்கிய வளர்ச்சிக்கு அடிப்படை, குழந்தை இதழ்களின் வளர்ச்சி. கிருத்துவ அமைப்புகள் இந்தக் குழந்தை இதழ்களுக்குச் செய்த பணியை, சென்னை என்னும் தமிழ்நாட்டுத் தலைநகரம் இந்தக் குழந்தை இதழ்களுக்குச் செய்திருக்க வேண்டிய பணியை புதுக்கோட்டை செய்து புகழ்க் கோட்டையானது. புதுக்கோட்டையும், அதனருகே உள்ள ராயவரமும் இல்லையென்றால், சிறுவர் இதழ் வரலாறு பாலவிநோதினியோடு முடிந்துபோய் இருக்கும். தமிழர்களால் தமிழ்க் குழந்தைகளுக்குத் தமிழ் மணமும், குணமும் நிறைந்த குழந்தை இதழ்கள் பல்கிப் பெருக அடித்தளம் அமைத்து, அக்க பூர்வமான பணியும் செய்தது புதுக்கோட்டை.



படிப்பகம்

www.padippakam.com

புதுக்கோட்டை என்னும் புனிதத் தலத்தைக் குழந்தைஎழுத்தாளர்கள் மட்டுமல்ல, குழந்தைகளும், குழந்தைகளைப் பெற்றவர்களும் கைகூப்பி வணங்கவேண்டும்; வாழ்த்தவேண்டும்.

புதுக்கோட்டையின் அருமை பெருமைகளை அறிந்தநான் அன்றுதான் முதன்முதலில் அந்த மண்ணில் கால் வைத்தேன் பின்பு, வள்ளியப்பாவின் வாழ்க்கை வரலாற்றை எழுதும்பணியில் ஈடுபட்டபோது, குழந்தைக் கவிஞருடன் அந்தப் பகுதி முழுவதையும்,பார்த்தது என்றும் மறக்க இயலாது.

புதுக்கோட்டையே குழந்தை இதழ்ப்பணிக்குப் புத்துயிர் அளித்தது! புதுமைகள் சேர்த்தது! தமிழகம் முழுவதும் ஏராளமான குழந்தை இதழ்கள் தோன்றக் காரணமானது.

1942 இந்திய வரலாற்றில் ஒரு புரட்சி ஆண்டு. இதே ஆண்டில்தான் குழந்தை இலக்கிய உலகிலும் ஒரு புர-ட்சி ஏற்பட்டது. இந்த ஆண்டில்தான் குழந்தைகளின் உள்ளத்திற்கேற்ற குழந்தைகளின் உலகைப் படைத்துக் காட்டும் உன்னத சிறுவர் இதழான “ பாப்பா மலர் ” உதயமானது. புதுக்கோட்டைக்கு அருகேஉள்ள, குழந்தைக் கவிஞர் பிறந்த ஊரான இராயவரம் என்னும் சிற்றூரிலிருந்து பாப்பா மலர் வெளிவந்தது. இதே ஊர்தான், குழந்தை எழுத்தாளர் சங்கத்தின் முதல் தலைவரும் அணில் அண்ணனுமான சக்தி வை. கோவிந்தன், குழந்தைகளுக்காக நூற்றுக்கு மேற்பட்ட நூல்களைத் தொடர்ந்து வெளியிடும் பழனியப்பா பிரதர்ஸின் செ. மெ.பழனியப்பச்செட்டியார் ஆகியோரும் பிறந்தஊர்.

பாப்பா மலரை வெளியிட்டவர் முத்து நாராயணன். இந்தப் பாப்பா மலர் தான் அதே இராயவரத்திலிருந்து பின்னே வெளிவந்த பாப்பா, புதுக்கோட்டையிலிருந்து வெளிவந்த பாலர் மலர், டமாரம், சங்கு, டிங்-டாங், முத்து முதலிய சிறுவர் இதழ்கள் தோன்றக் காரணமாக இருந்தது.

பாப்பா மலர் இன்றைய விகடன் அளவில் வெளிவந்தது. ஆனால் நியூஸ்பிரிண்டில் அச்சாகாமல் நல்ல வெள்ளைத் தாளில் அச்சானது. இது ஒரு மாத இதழ். இதன் விலை மூன்று அணா(சுமார் 18 காசு)என்று நினைவு. தொடக்கப் பள்ளியில் படித்த காலத்தில் நான் வாங்கிப் படித்திருக்கிறேன்.

பாப்பா மலர் விலை காலணா(1 1/2 காசு) என்றும், அது ஒன்பது மாதங்கள் மட்டுமே வெளிவந்தது என்றும், குழந்தை இலக்கியத்தை நன்கு உணர்ந்த ரத்னம் அவர்கள் குழந்தை இலக்கியம் ஒரு மதிப்பீடு என்னும் நூலில் எழுதிய (சிறுவர்) பத்திரிகை என்னும் கட்டுரையில் குறிப்பிடுகிறார். இதன்

www.padippakam.com

உண்மை தெரியவில்லை. காலணா விலையில் வெளிவந்த முதல் சிறுவர் இதழ் சங்கு. கையளவுள்ள சிறிய பத்திரிகை. அதே விலையில் பாப்பாமலர் முதலில் வெளிவந்ததா என்பது ஐயத்திற்குரியது. அந்த அளவுள்ள இதழ் பாப்பாமலர் பெற்ற பெரும் புகழைப் பெற முடியாது என்பதே என் திண்ணம்.

நான் பார்த்ததாக மேலே குறிப்பிட்டுள்ள பாப்பா மலர் பெற்ற வெற்றியைக்கண்டு 1944 இல், அதே இராயவரத்தி லிருந்து பாப்பா என்னும் சிறுவர் மாதஇதழை இராம.தியாக ராஜன் வெளியிட்டார். இவர் சக்தி வை. கோவிந்தனுடைய தம்பி. இதன் விலை 4 அணா (25 பைசா). புதுமைகளைச் செய்து, அவை பெறாத பெரும் புகழ் பெற்றுச் சிறந்தது.

பாப்பா இதழில் வண்ணப் பக்கங்களும் இருந்தன. சிறுவ ரைக் கவரும் ஒவியங்களும் நிறைந்திருந்தன.

குழந்தை இலக்கிய உலகில் பெரும் புகழ்பெற்ற பி.ஆர். ராஜசூடாமணியும், பிறகு தி.ஜ.ர அவர்களும் பாப்பா வின் ஆசிரியராகத் திகழ்ந்து குழந்தைகளுக்கு அற்புதமான இலக் கிய விருந்து வழங்கினார்கள். இவர்களோடு பேராசிரியர் அ. சீனிவாசராகவன், எஸ்.ஈஸ்வரன், கம்பன் அடிப்பொடி சா. கணேசன் முதலானவர்களின் எழுத்தோவியங்களும் வந்தன.

பாப்பாவின் ஆசிரியராக நீண்டகாலம் தொண்டாற்றிய -வர் தி.ஜ.ர. அவார். இதழ் புதுக்கோட்டையிலிருக்க, ஆசிரி யர் தி.ஜ.ர. சென்னையிலிருந்தார். தியாகராஜன் அவர்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கிடையேயும் பாப்பாவைத் தரம் குறையாமல், பக்கம் மெலிந்து விடாமல் வெளியிட்டு வந்தார்

ஒரு முறை தி.ஜ.ர அவர்கள் தியாகராஜனிடம் கோபம் கொள்ளும் சூழல் ஏற்பட்டது. அதனால் இனி பாப்பா - வை 'நீயே பார்த்துக் கொள். அதன் ஆசிரியர் பொறுப்பு எனக்கு வேண்டாம்' என்று கூறிவிட்டார். தியாகராஜனின் வேண்டு கோள் இம்முறை எடுபட வில்லை.

அன்று மாலை தி.ஜ.ர. சென்னை மவுண்ட்ரோடு அருகே மிட்லேண்ட் தியேட்டரை ஒட்டிய நடைபாதையில் சென்று கொண்டிருந்தார். தற்செயலாய் அங்கே வந்த தியாகராஜன் அவரைப் பார்த்துவிட்டு, அவரை அணுகி, பாப்பாவின் ஆசிரி யர் பொறுப்பை அவர் விடக்கூடாது என்று வேண்டினார். கெஞ்சிக் கூத்தாடி வணங்கி வேண்டினார். இத் தொல்லை யைப் பொறுக்க முடியாத தி.ஜ.ர. இதிலிருந்து தப்பித்துக் கொள்ள வழிதேடினார். நடை பாதையை ஒட்டி ஒரு ரிக்ஷா


படிப்பகம்

www.padippakam.com

ஆளை வைத்து ஆள் இழுக்கும் அந்தக் காலத்து எளிய வாகனம் இருந்தது. நடைபாதையில் நடந்து வந்து கொண்டிருந்த தி.ஜ.ர. திடீரெனக் கீழிரங்கி, இந்த ரிக்ஷாவில் ஏறி உட்கார்ந்து கொண்டார். ரிக்ஷா போ' பா என்று கூறினார்.

ரிக்ஷாக்காரன் ரிக்ஷாவை எடுப்பதற்கு முன், தியாகராஜன் " நீ கொஞ்சம் தள்ளு " - என்று கூறி அவனை ஒதுக்கி விட்டு, ரிக்ஷாவின் கைப்பிடிக்குள் தான் நுழைந்து நின்று, ரிக்ஷா கைப்பட்டையைத் தானே தூக்கி நிமர்த்தி, அதை இழுத்துக் கொண்டு நடக்கத் தொடங்கினார்.

கைரிக்ஷா இழுக்கும் லாவகம், அதில் பயிற்சி பெற்றவர்களுக்கு மட்டுமே உண்டு; தியாகராஜன் இழுத்துச் செல்ல, தி.ஜ.ர. பதறி, " வேண்டாம்! வேண்டாம்! ரிக்ஷாவைக் கீழே இறக்கு " - என்று கூறி(வி)னார்.

"நீங்க ஆசிரியப் பொறுப்பைத் தொடருவேன்னு சொன்னால்தான், ரிக்ஷாவை நிறுத்துவேன் அதுவரை இழுத்துச் செல்வேன்" என்றார் தியாகராஜன்.

தி.ஜ.ர. உடனே " சரி! சரி! நான்தான் இனியும் பாப்பா ஆசிரியர்! ரிக்ஷாவை இறக்கு " என்று இசைவு தெரிவித்தார் இதற்குள் ரிக்ஷா, சாலையின் திருப்பத்துக்கே வந்துவிட்டது

ரிக்ஷாவை தியாகராஜன் நிறுத்த, தி.ஜ.ர.இறங்கினார்.

பின்னே ஓடிவந்த ரிக்ஷாக்காரனுக்குக் கொஞ்சம் அதிகமாகவே அன்று கூலி கிடைத்தது.

இந்த நிகழ்ச்சியைத் தி.ஜ.ர, அவர்களே, அவர் பாப்பாவுக்குப் பாரதி நூலுக்காகப் பரிசு பெற்றமைக்கு நடந்த விழாவில் கூறியதைக் கூட்டத்திலிருந்து கேட்டவன் நான்.

இந்த நிகழ்ச்சியை இங்கே விரிவாகத்தரக் காரணம் என்ன

பொருள்வளம் தராத துறை பத்திரிகைத்துறை. அதிலும் குழந்தைப் பத்திரிகை வருவாயில் கடை நிலைக்கும் கடைப்பட்ட நிலை. அப்படியிருந்தும் ஒருவர், சிறுவர் இதழ் ஒன்று தரம் குறையாமல் தொடர்ந்து வெளிவர, ரிக்ஷா இழுப்பதற்றுணிந்தார் என்றால் அவரது குழந்தை இலக்கியப்பணி எவ்வளவு சிறப்பானது என்பதை மற்றவர்கள் உணரவே இதை இங்கே விளக்கினேன். தி.ஜ.ர. அவர்களுடன் மிகப்பலமுறை உரையாடி மகிழ்ந்துள்ளேன். அவர் சக்தி ஆசிரியர் குழுவில் இருந்தது, மஞ்சரி தமிழ் டைஜஸ்டின் ஆசிரியராகத் திகழ்ந்தது, நவமணி நாளிதழின் ஆசிரியர் பொறுப்பேற்றது ஆகிய


படிப்பகம்

www.padippakam.com

அனைத்தைக் காட்டிலும் சிறப்பாகப் பதித்தது பாப்பா அசிரியர் பணியையே! இன்று வரை வெளியான சிறுவர் இதழ்களோடு ஒப்பிட்டுப் பார்த்தாலும் "பாப்பா" இதழ் தான் ஒப்பில்லா மாமணி என்பது உண்மை.

பாப்பாவின் தனி இதழே இப்படி என்றால், அதன் மலர் தீபாவளி மலர் எப்படி இருந்திருக்கும்?

அடுத்த இதழில் காண்போம். (தொடரும்)

---

1998 இல் தொடங்கிய இதழ்கள்:

✖ மணிமுத்தாறு, கண்மணி குணசேகரன், மணக்கொல்லை இழந்தவைகளை மீட்டெடுக்கும் விதமாக, வட்டார வழக்கு, கவிதை, நாட்டுப்புறக் கதை எனப் பதிவு செய்துள்ளது.

✖ முத்தமிழ். உதகை பொன்னழகனின் தொடர்பு இதழ்

✖ சிறகுகள். காலாண்டிதழ், லில்பா லிட்ரேச்சர்(பி)லிட எஸ்.வி.பெருமாள் வளாகம், வள்ளியூர். இலக்கிய இதழா வள்ளியூர் டைம்ஸ் அசிரியர் வெளியிடுகிற கிருத்துவ இதழ்.

✖ சிற்றிதழ்ச் செய்தி 25 இல் விடுபட்ட இதழ்கள்:

✽ அசைகள், கீதாலயன். 55.பக்தபுரித்தெரு, கும்பகோணம்.

✽ ஈழ சுதந்திரன், அருணாசலம் கோபாலன், 14சேட்காலனி எக்மோர், சென்னை 8. அ11, ப, த3, மா, 2. செய்தி இதழ்.

✽ தமிழ் மாருதம், ச.சாம்பசிவனார், அ.பெ: 155, மதுரை 1

✽ வார முரசு, 2/450 டி, தெய்வானை நகர், சிவகாசி.

● உடுமலை புதிய சிறகுகள் இலக்கிய இயக்கத்தின் செயலரும், அன்பு நண்பருமான ஆ. அரிமா, அவர்களது மரணம் மனவருந்தம் தருவதே. ●

⚙ கடவுள் திரைப்படம். ⚙ மக்கள் தொடர்பு சாதனமான சினிமாவை இயக்குநர் வேலுபிரபாகரன் மிகச்சரியாகப் பயன்படுத்தி, விதைத்துள்ளார்.தயாரிப்பாளர்அன்ராஜுக்கு நன்றி

✽ ஐ.பி.சி., தமிழ், அ.பெ.எண்: 1505, இலண்டன். தினமும் காலை 6 1/2 முதல் 7 1/2 வரை தமிழில் ஒலிபரப்பாகிறது.

## வந்த நூல்கள்

✖ மருத்துவ ஆய்வுக்கூட பரிசோதனைகள் கையேடு. தஞ்சை இரா.கண்ணன் தமிழில் எழுதிய ஆய்வுக்கூடச் சோதனைகள்

படிப்பகம்

www.padippakam.com

✖ சிற்றிதழ்கள். மணிவாசகர் பதிப்பகம், 8/7 சிங்கர் தெரு பாரிமுனை, சென்னை. 108. ரூ 25. பொள்ளாச்சி நசன் பிற இதழ்களில் எழுதி வெளியான 35 கட்டுரைகளின் தொகுப்பு நூல். சிற்றிதழாளர்கள் படித்துப் பயனாக உதவுகிற நூல்.

✖ தேனீக்கள். இமயம் பதிப்பகம், 8 நீலாதெற்குவீதி நாகப் பட்டினம். ஜீ.காசிராஜன் எழுதிய 10 கதைகளடங்கியது.பேய் கதையைப் படித்தபோது பெண் மனஒடுக்குதலை சுட்டியது.

✖ இதய சூரியன். ராஜபாரதி, ராஜேஸ்வரி பதிப்பகம், 12ஏ ஆபிசர்ஸ் அவின்யூ, புதுக்குப்பம், கடலூர். உரை வீச்சு.

✖ கான்சிட்டுகள். செம்மைநதி ராசா, பரதன் இதழ், கோவில் பட்டி(கவிதைகள் என்றாலே காதல், பெண் வக்கிரம், புரட்சி என்பதிலிருந்து - மாற்றிச் சிந்திக்க முயலுவார்களாக!)

✖ தமிழ் ஈழப் போர்ப்பரணி. சிங்கார வேலன். இசையொடு பாடுதலுக்கேற்ற பாக்களின்தொகுப்பு.காவேரிசாலை,திருச்சி

## நிகழ்வுகள்

06-07.12.97 திருநெல்வேலி, யாதுமாகி கவிதை ஆய்வரங்கம்
13.12.97 சென்னை, வைகறை இலக்கிய வாசல் - விழா.
21.12.97 கோவை, மக்கள் சிவில் உரிமைக்கழக மாநாடு.
24.12.97 கோவை, விஜயா பதிப்பகம் வாசகர் திருவிழா.
31.12.97 திருவண்ணாமலை, த.மு.எ.ச. கலை இரவு 98.
10.01.98 சென்னை, சாதி ஒழிப்பு ஐக்கிய முன்னணி நிகழ்வு
18.01.98கோவை, தோப்பில் முஹம்மது மீரானுக்கு பாராட்டு
23.01.98 கோவை, பாரதியார் பல்கலைக் கழகம், தருமராசு செல்லம்மாள் அறக்கட்டளை சார்பில் சித்தமருத்துவப் பகிர்வு
23.01.98 சென்னை, மருத்துவ அறிவியல்கழக 6வது மாநாடு
25.01.98 பாகூர், புதுவை, போராளிகளின் வீர வணக்கநாள்
25.01.98 கோவை, ஸ்ரீபதி பத்மநாபா நூல் அறிமுக விழா.
01.02.98 பெங்களூர்,வள்ளுவர் சிலைக்காக உண்ணாநோன்பு
08.02.98 கோவை, பட்டொளி வீசி, சிறுகதை வெளியிடு.


படிப்பகம்

www.padippakam.com

சிற்றிதழ்ச் செய்தி ஆய்வு இதழ். தனிச்சுற்றுக்கு. பிப்ரவரி 1998
பதிவு பெற்ற இதழ் ★★★ பதிவு எண் : 72584/93/இ1

# நான் ஓர் தமிழச்சி

— பொள்ளாச்சி நசன் —

முடி பிசுக்கோடு வெள்ளை நிறமும்
கூடிக் கொண்டே போகிறது,
முத்துக் கோர்க்க முடியாதபடி.

சுருக்கமும் குழிகளும் அதிகமாகி
கறுத்துப் போகிறது முகம்,
சிகப்பழகு கூட்ட அதிக மாதங்களாகுமோ ?

கட்டுகிற சேலையில் ஆயிரம் கிழிசல்கள்,
இன்னொரு முறை சொல்லுங்க.
சொல்லுபவர் யாரோ ?

காலையில் சஞ்சிப்பாத்திரம் தூக்கி நடந்து
மாலைவரை சேற்றில் நிற்கிறேன்,
மகாராணிக்கால் ஆகாதபடி.

சோறாக்கி, துணிதுவைத்து, வீடுகூட்டி,
கைகழுவக்கூட நேரமில்லை:
புன்னகைப் புத்துணர்ச்சிக்கு நேரமேது ?
பட்டுப்போல மேனி பளபளப்பதெப்போது ?

பெருமை, அழகு எதுவுமில்லாவிட்டாலும்,
நான் மகிழ்கிறேன் - ஏனெனில்
நான் ஓர் தமிழச்சி,

நன்றி: சுந்தர சுகன். ஜனவரி: 98.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : பொள்ளாச்சி நசன்,
இதழ் முகவரி: 1.சம்பத்நகர், சூளேஸ்வரன்பட்டி, பொள்ளாச்சி- 6.
அச்சமைப்பு: நசன்அச்சகம், பொள்ளாச்சி-6. அ.கு.எண் 642 006

படிப்பகம்